தர்ம வெளியீடு                                        No. 3

உ

வேலுமயிலுந்துணை.

# தொண்டைமானாற்றுச்
# செல்வச் சந்நிதி
# வடிவேலர் பதிகம்.

இதன் ஆக்கியோன்

வண்ணை, நே. வை. செல்லையர்.

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

க. இராமச்சந்திரனால்

கொழும்பு,

மெய்கண்டான் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

ஐப்பசி மாதம்

1937

266
~~294.535~~
CHE S4
PB

294.535
CHE
PB

ARCHIVES

ARCHIVES

266

207

# முகவுரை.

"ஆறு திருப்பதிகண் டாறெழுத்து மன்
பினுடன் கூறுமவர் சிந்தை குடி கொண்
டோனே"

என, குமரகுருபர சுவாமிகளால் கொண்டாடப்பெற்ற கலியுகவரதராம் சுப்பிரமணியப் பெருமானுக்கு இந்தியாவில் ஆறுபடை வீடுகள் இருப்பது போலவே, எமது ஈழ நாட்டினும் ஆறு திருப்பதிகள் இருக்கின்றன.

அவையாவன:- குறிஞ்சியில் கதிரைமலை, உகந்தமலை; நெய்தலில் மாவிட்டபுரம், கந்தவனம், செல்வச்சந்நிதி; மருதத்தில் நல்லூர்.

இவற்றுள், தெற்கேயுள்ள கதிர்காமமும், வடக்கேயுள்ள செல்வச்சந்நிதியும் அதிக விசேஷ ஸ்தலங்களாகக் கருதப்படுகின்றன. இவ்விரு ஸ்தலங்களில் வழிபாட்டு முறையிலும் அர்ச்சகர் ஒழுக்கத்திலும் ஒற்றுமை காணலாம். சாதி சமயம், உயர்வு தாழ்வு, சிறியோர் பெரியோர், என்ற வேற்றுமை இரண்டிடத்துங் கிடையாது. எல்லாம் வல்ல முழு முதற் கடவுளாகிய முருகப் பெருமானே, வேண்டுவார் வேண்டுவதை அளிக்கும் நோக்கால், சுத்த சைதன்ய பரமாத்ம சாட்சாக்கார சிவானுபூதிச்சொரூப நிலையில் இவ்விரு ஸ்தலங்களிலும் அருளாடல் புரிவது பக்தர் கோடி அநுபவித்துணர்ந்த உண்மையாகும்.

கதிர்காமத்தில் இறைவன் தனது திருவருள் விலாசத்தைப் பேடகத்தின்கண்ணே வைத்திருக்கின்றான். செல்வச் சந்நிதியில் தனது வேற்படையின்கண்ணே வைத்திருக்கின்றான்.

எனது நான்காவது வயதில் கேள்விப்பட்ட இச்சந்நிதியைத் தரிசிக்கும் பாக்கியம் நாற்பதாவது வயதில்தான் கிடைத்தது. எனது வினை மாறுங்காலம் எட்டும்வரையில் இப் புண்ணிய யாத்திரை கிட்டவில்லைப் போலும். இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள பல ஸ்தலங்களைப் பன்முறை தரிசித்த எமது கண்களுக்குச் சந்நிதியில் முதல் முதல் பெற்ற காட்சி ஓர் புது உணர்ச்சியை உண்டாக்கிற்று.

"தில்லையைக் காண முத்தி, அருணையை நினைக்க முத்தி" யென்ற புராணக் கூற்றை ஒட்டிக் "கதிர்காமத்தைக் காணப் பக்தி, சந்நிதியை எண்ணப் பக்தி", என்று விசேடித்துக் கூற என் இருதயம் தூண்டிற்று.

பின்பு, யான் அடிக்கடி சென்று தரிசித்து வரும், அநுபவத்தில் என்னை முழுவதுமே தனக்கு அடிமையாக்கிக் கொண்ட அப்பெருமானின் மீது சில தோத்திரங்களை இயற்றித் துதிப்பதற்கு விரும்பியபோது, நல்லைச் சண்முகமாலையும் அதில் என்னைப் பரவசப்படுத்திய சில செய்யுட்களும் எனது ஞாபகத்திற்கு வந்தன. அத

ளைச் செய்தோர் எமது நண்பரும், தமிழ்த்தாயின் அரிய புதல்வரும், கலியுகவரதர்மீது இடையறா அன்பு பூண்டவருமாகிய வண்ணை பண்டிதர் கெ. வை. செல்லையா அவர்களே! பக்தன் இயற்றும் பாட்டே பக்திரசந் ததும்பும் என்ற உணர்ச்சி தூண்ட, மேற்கூறிய அன்பரிடத்தில் எமது விருப்பத்தை வெளியிட, அவர் இயற்றி உதவிய பாக்களே இச்சிறு புத்தகத்திலடங்கியவை.

குகனடியார்க்கு அப்பெருமானின் திருவருட் பிரசாதமாக இந்நூலை அளிக்கும் பாக்கியத்தை எமக்குதவிய அன்பர் செல்லையா அவர்கட்கு யாம் பெரிதுங் கடமைப்பாடுள்ளோம்.

க. இராமச்சந்திரன்

கொழும்பு,

ஈசுர ஆண்டு ஐப்பசி மாதம்,

கந்த ஷஷ்டி வாரம்.

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

சிவமயம்.

# தொண்டைமானாற்றுச் செல்வச் சந்நிதி வடிவேலர் பதிகம்.

---

## நேரிசை வெண்பா

### காப்பு

---

பொன்னிதியா யன்பருளம் பொற்பூரு நற்பதிகஞ்
சந்நிதிவாழ் வேலவர்மேற் சாற்றவே—மன்னும்
பதிக்கையொளிர் கோட்டுடையான் பத்தர்தமை
துதிக்கையுடை யானே துணை— [யேற்றுந்

## எண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

பூமேவு மக்கள்தம துடற்கு மேலாம்
பொருந்துரிமை சிரத்தின்மே லிலாத வாபோற்
தேமேவு முனதருளின் செழுமை மேலாய்த்
தெரிவரிதொன் றிலாமையன்பர் தெரிவர் நாயே
மாமேவு மதுதெரியா தலக்க ணுற்றேன் [ன்
மயிலூரு மாமணியே வடிவேற் கையா

கோமேவு தொண்டைமா னூற்றின் பாங்கர்
குலவுசெல்வச் சந்நிதியாய் குமர வேளே— 1.

எனக்கினியார் உளரென்றே இந்நாள் மட்டும்
எண்ணியிறு மாந்துகளைத் தின்ப மற்றே
மனக்கினியார் மாட்டுளதாம் மதுரம் வேட்டு
மறிகளத்து மாலைதழை மகிழ்ந்த வாபோல்
தனக்கினியார் அறியாத சனனங் கொண்டேன்
சண்முகனே பிழைபொறுத்துத் தரியே லின்னும்
புனக்கினியார் மகிழ்ந்ததொண்டை மானு றேங்கும்
புண்ணியனே சந்நிதியாய் பொருவி லானே— 2.

தொண்டுகொள மறுப்பாயேற் றுணேவே றில்லைத்
தொழுதடிக்கே மறித்துமின்னல் சொல்வேனையா
வண்டலுனக் கென்பாலேன் வடிவேற் கையா
வற்றியபான் முலையெனினும் மதலை தாயை
யண்டியதிற் சுவைத்தமுகை அடைவுண் டாமால்
அறுமுகனே யருள்தொண்டை மானு றேங்குந்
தேண்டிரையாற் பண்டறிவு தெரிக்க முந்நீர்
தினம்வணங்குஞ் சந்நிதியிற் திகழுந் தேவே— 3.

வாக்கிறந்த பூரணமாய் வளரு மின்பம்
வள்ளிமண வாளநின்பால் மருவு மன்பர்க் (கு)
ஆக்குமெனு முண்மைதனை யருச்சிப் போர்பால்
அறியவைத்தாய் வாய்புதைக்க அவனிதன்னில்

பூக்குமொரு கணமேனு முன்பால் நெஞ்சம்
பொருந்திநில்லேன் அருணகிரி புகன்ற மார்க்கம்
தேக்குமொழி யறச்சும்மா விருநீ யென்ற
திறமருள்வாய் சந்நிதியிற் செழிக்குந் தேவே—4.

முருகுவரை பகவெறிந்தோன் முன்னோன் பின்னோன்
மொய்குழன்மான் மகட்பாகன் முருகன் சேந்தன்
அருகுநிற்போன் நினைப்பவர்பால் அன்பர்க் கன்பன்
ஆண்டலைக்கே தனமுயர்த்தோன் ஆசான் செவ்
குருகினமென் றுயர்சேனங் கைகை நோக்கிக் [வேள்
குலவுசெல்வச் சந்நிதிவேற் குமரன் பாதம்
உருகுமனத் தவர்க்கெளிதா யுளதீ தென்றே
யுரைசெயற்கு முடியுமோ உலக மீதே— 5

அழிக்குமுலோ காயதமா மதம ரோடே
ஆனநெறி யெதுவெனினு மடுக்குந் தேகம்
விழிக்குமெது பிறப்பெனினும் விடுகை செய்யேல்
விளங்குதொண்டை மாறுற்றின் மீக ணோங்கிக்
கொழிக்குமுத்தந் தனைக்குருகு சினையென் றேடிக்
கூர்ந்துசிற காலணைக்குங் குளிர்பூங் கானல்
செழிக்குமுயர் சந்நிதிவாழ் தேவே நின்பால்
திரியாத அன்பெனக்குச் சேர்ப்பிப் பாயே— 6.

ஆனநிலை யொன்றெனினு மடைந்து மற்றோர்
அகங்குளிர எக்காரணத் துதவி யேனும்

ஈனமறச் செயும்பரிவு கூடா யாக்கை
ஏனளித்தாய் இருந்துபயன் என்னே அந்தோ
கானவர்பூங் கோதைமகிழ் கனியாய் நின்ற
கதிர்வடிவேற் காதலனே கார்த்தி கேயா
கூனலொலி மலிதொண்டை மானூ றம்பொற்
கோயில்திருச் சந்நிதிவாழ் குமர வேளே— 7.

சுடர்விரிக்குந் திருமுடியோ ராறு மன்பர்
துயர்களையுங் கருணைவிழி யாறி ரண்டும்
இடர்களையுங் கருணைமுக மாறும் வேலும்
இன்மைதவிர்த் தருள்கரங்கள் பன்னி ரண்டும்
இடனளிக்குங் குறுமுறுவல் இயலும் வாயும்
எழில்நீபத் தொடைமார்பும் எளியேன் கொண்ட
கடமகல முனர்த்தொண்டை மானூ றோங்கும்
கடவுளே சந்நிதியாய் காண்பிப் பாயே— 8.

வள்ளிமலை திருத்தணிகை வயலூர் செந்தில்
மயூரகிரி மறைக்காடு மயிலம் மாவை
வெள்ளிவனங் கழுகுமலை வேளூர் நல்லை
வேதவெற்பு சுவாமிமலை விராலி குன்றம்
புள்ளிமணிக் கிரிகதிரை பழனி தில்லை
பூந்துருத்தி பரங்குன்றம் புகலி நாகை
துள்ளியிவை தனில்விளையாட் டயர்ந்தா யெங்குந்
தோய்ந்துநின்றாய் சந்நிதியிற் றரிய வாழ்வே— 9

பற்றெனக்குன் பாதார விந்த மல்லால்
பாரிலொன்றுந் துணையுளதாய்ப் பாரேன் ஐயா
சுற்றமிலை யெனக்குதவி செய்வா ரில்லைத்
துயரமொடு வறுமைப்பிணி தொலைந்த தில்லைக்
கற்றலிலைக் கேட்டலிலைக் கருத்து மில்லைக்
கண்ணியமும் புண்ணியமும் கதியு மில்லைப்
பெற்றதொன்று மிலைத்தொண்டை மானு ரோங்கும்
பேரூரா சந்நிதியாய் பேணிக் கொள்ளே— 10.

## தனியன்கள்.

விண்பரவுஞ் சந்நிதியா யெளியேற் கிந்த
வியனுலகில் அடைவுறுசெம் பொருளுண் டேலக்
கண்பரவும் பொருளுனது கழலே யன்றிக்
காண்பரிதா யுளதெதுநற் காட்சி சாலுந்
திண்பரவு பொருளெவைக்கு மழிவுண் டாமால்
தேடியவை பின்னிருந்து சேரக் கொண்டாய்
மண்பரவு மாமணியே மயிலூர் கந்தா
வருந்துவதுன் றிருவருட்கு மகிமை யாமோ—

எதுமொன்று தேவையெனக் கிருக்கு மாயி
னேற்ற பொரு ளதுதெரிவோ யிசைக்கு மந்தக்
கோதுபடா நற்பொருளைக் கொடுப்போ யென்று
கூறுமுன தருணூல்கள் குறித்த மாற்றந்
தீதுவா முடியுமோ செல்வ மோங்குந்
திருவருட்சந் நிதிவடிவேற் செல்வா முன்னை
யோதும்வினைத் துயர்படவோ விதித்தா யென்னை
யொருதுணையு மற்றேனை உய்யக் கொள்ளே—

நன்றறியா ரொன்றறியார் நலமே யில்லார்
நால்வகையில் முன்மொழிய நடுவு முன்னும்
நின்றறிவா ருன்தமிழ்க்கு நேயம் பூணார்
நிலைகெடுவார் தமையடக்கும் நிலைமை வையேல்
கன்றெறிந்தார் விளவுதிர்த்தோன் காமர் கூரும்
கண்கள்பனி ரெண்டுடைய கதிர்வேற் கந்தா
அன்றறிவா மெனவிடுதி கண்டா யையா
ஆற்றுதிப் பொழுதேயென் னலக்கண் தீரோ—

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

# மெய்கண்டான்

## திருக்குறட் கலண்டர்

உங்கள் இடங்களில் மங்களகரமாக
விளங்கத்தகுந்தது

ஒவ்வொருதேதியிலும்
திருக்குறள் மூலமும் உரையுமாக
முறையே வரிசையாக உள்ளது.

மாணவர், ஆடவர், மகளிர் யாவரும்
காலையில் எழுந்தவுடன்
பார்த்து மகிழத்தக்கது

அன்புக்குரிய ஆப்த நண்பர்களுக்கு
ஞாபகப்பொருளாக
அனுப்பத் தகுந்தது.

---

மெய்கண்டான்

## தமிழ் டயறி

ஒவ்வொருவர் கையிலும் இருக்கத்தக்கது.
கையடக்கமான அளவும், அழகும், உறுதியுமுள்ளது.
மிகவும் பிரயோசனமான
பல விஷயங்களுள்ளது.